# அன்புகூருவதற்குப் பலம் (3:14-21)

*உங்கள் ஜெபத்தில் நீங்கள் பெரிய விஷயங்களைக் கேட்கின்றீர்களா?* E. M. *பவுன்ட்ஸ் அவர்கள் ஜெபம் பற்றிப் பின்வரும் சிந்தனைகளை அளித்துள்ளார்: "பூமியிலும், வானத்திலும், காலத்திற்கும் அல்லது நித்தியத் திற்கும் நமக்காகத் தேவனுடைய குமாரன் பாதுகாத்து வைத்திராதது எதுவுமே இல்லை ... தேவன் நம்மை 'கிருபாசனத்தண்டை தைரியமாய்ச் சேரும்படி' நமக்குக் கட்டளையிடுகின்றார். பெரிதாகக் கேட்பதினால் தேவன் மகிமைப்படுத்தப்படுகின்றார், கிறிஸ்து கனப்படுத்துப் படுகின்றார்."*[1] *உங்கள் உள்ளூர் சபையானது "பெரிதாய்க் கேட்பதினால்" தேவனை மகிமைப்படுத்தி கிறிஸ்துவைக் கனப்படுத்துகின்றதா?*

*பெரிய அளவில் ஜெபித்தல் என்றால் என்ன என்பதைப் பவுல் அறிந்திருந்தார். 3:14-21ல் அவர், எபேசுவில் இருந்த கிறிஸ்துவின் சரீரமாகிய உள்ளூர் சபைக்காக ஜெபித்தார். உள்ளூர் சபைக்காக இதைக் காட்டிலும் வேறு எந்த சிறப்பான ஜெபத்தை ஜெபிக்க முடியும்? இது "பெரிதாய்க் கேட்பதினால்" தேவனை மகிமைப்படுத்தி, கிறிஸ்துவைக் கனப்படுத்திற்று.*

> *இதினிமித்தம் நான் பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமை யாய்ப் பலப்படவும் விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங் களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலை பெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினு டைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப் படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற் கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின் படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங் களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென் (3:14-21).*

*இந்த ஜெபத்தை ஆராய்கையில், நாம் முக்கியமான மூன்று பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.*

# பிறர்மீது அன்புகூரத் தேவன் (நமக்கு) பலம் அளிக்கின்றார்

*கிறிஸ்துவின் சரீரம் பவுலின் சிந்தையில் இருந்தது. அவர் கிறிஸ்துவின் சரீரமானது தேவன் விரும்புகிறபடியெல்லாம் ஆவதைக் காண வேண்டும் என்று விரும்பினார். அவர், பலம் வாய்ந்த, ஒன்றிணைந்த, அன்புகூருகின்ற ஒரு உள்ளூர் சபையைக் குறித்துக் கனவு கண்டார்.*

*இது நடப்பதற்கு என்ன தேவைப்படும்? இதற்கு தேவனுடைய வல்லமை தேவைப்படும், அதுவே பவுலின் ஜெபமாயிருந்தது. வசனம் 16, ''நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமா யிருக்கவும் ... அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்'' (3:16-19) என்று கூறுகிறது.*

*உள்ளூர் சபைக்கான மாபெரும் தேவை என்ன? ஒரு சபைக்கு வேறு எந்த விஷயத்தைக் காட்டிலும் அதிகமாய்த் தேவைப்படுவது என்ன? சிலர், "எங்களுக்குத் தேவைப்படுவது ஒரு புதிய கட்டிடம் தான்" என்று கூறலாம். இன்னும் சிலர், "எங்கள் ஊழியங்களில் ஈடுபாடு கொள்ள அதிகம் மக்கள் எங்களுக்குத் தேவை" என்று கூறலாம். இன்னும் சிலர், "முறுமுறுத்தலும், முறையிடுதலும் குறைதல் என்பதே எங்கள் தேவை" என்று கூறலாம்.*

*எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் தேவனுடைய வல்லமையில், வலிவில், பெலத்தில் ஒன்றுகலத்தல் என்பதே மிகுந்த அவசியம் என்பதாகக் கிறிஸ்தவர்கள் காண வேண்டும் என்று பவுல் விரும்பினார். நம் வாழ்வில் இவ்வல்லமையானது ஜெபத்துடன் தொடக்கம் பெறுகின்றது. எந்த ஒரு உள்ளூர் சபையும் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு அதற்கு ஜெபத்தின் மூலம் வருகின்ற தெய்வீக வல்லமை தேவைப்படுகின்றது. பவுல் இதை அறிந்தார், எனவே அவர் தம்மை உண்மையிலேயே முழந்தாள்படியிடக் கொண்டு வந்த வலிவுடன் அதற்காக ஜெபித்தார்.*

*வல்லமையானது ஜெபத்துடன் தொடக்கம் பெறுகின்றது, ஆனால் இந்த வல்லமை எங்கே இயங்குகின்றது? தேவனுடைய வல்லமை இயங்குகிற இடம் "உள்ளான மனிதனுக்குள்" என்று வசனம் 16 கூறுகின்றது. "உள்ளான மனிதன்" கிறிஸ்தவரின் சிந்தனைகள், செயல்கள், நோக்கங்கள் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றான். இந்தக் கட்டுப்பாட்டு அறையை சரியாக இயக்க தேவனுடைய தெய்வீக சக்தி அவசியமாகின்றது.*

*நான் மடிமீது வைத்து இயக்கும் (லேப்டாப்) கணணி ஒன்றை வைத்துள்ளேன். அது சற்று நேரத்திற்காகிலும் ஒரு மின்கலத்தினால் இயங்கும். இருப்பினும் சற்று நேரத்தில் அதில் உள்ள பச்சை விளக்கு அணைந்து, ஒரு பீப் ஒலி எழும்பத் தொடங்குகின்றது. அதன், சக்தியானது அதில் ஏறக்குறையத் தீர்ந்து போய் விட்டது என்று அர்த்தப்படுத்துகின்றது. நான் கணணியைத் தொடர்ந்து பயன்படுத்த விரும்பினால் வேறு எங்கிருந்தாவது அதற்கு மின் சக்தி அளிப்பதைத் தவிர வேறு வழியில்லை.*

நீங்கள் ஆவிக்குரிய மின்கலம் ஒன்றைக் கொண்டு இயங்குவதில்லை, ஆனால் உங்களிடத்தில் உள்ளான சக்தி இவ்வளவாக மட்டுமே உள்ளது. இதை நீங்கள் வாசிக்கையில் நல்நிலை கொண்டிருக்கலாம்; உங்கள் வாழ்வில் பச்சை விளக்கு பிரகாசமாய் ஒளி வீசலாம். உள்ளான வல்லமை யின் ஏராளமான அளிப்பு ஒன்றை நீங்கள் கொண்டிருக்கலாம். இதற்கு மறுபுறத்தில், நீங்கள் ஆவிக்குரிய சக்தி ஏறக்குறையத் தீர்ந்துபோன நிலையில் கீழான இடத்தில் இருக்கலாம். உங்களை நீங்களே பராமரித்துக் கொள்வதற்கும்கூட நீங்கள் குறைவாகவே/அரிதாகவே சக்தியுள்ளவர் களாய்க் காணப்படலாம், இது மற்றவர்களின் தேவைகள் அல்லது அக்கறை கள் குறித்த எந்தச் சிந்தனையையும் உங்களுக்கு மிகக் குறைவாகவே அளிப்பதாயிருக்கும்.

ரேண்டி பெக்ட்டன் என்பவர் புற்றுநோய்க்கெதிரான தமது தனிப்பட்ட போராட்டத்தின் இருண்ட நாட்கள் சிலவற்றின் போது, குறைவான சக்தி குறைவு—உடல் சக்தியில் குறைவு மட்டுமின்றி மனம் மற்றும் ஆவிக்குரிய சக்தியில் குறைவு—பட்டுக் காணப்பட்டார். அவர் தேவனில் சக்தியின் ஆதார மூலம் ஒன்றைக் கண்டார். இதை அவர், "எனவே எனக்கு உதவும் தேவனே" என்ற தலைப்புக் கொண்ட கவிதையில் விளக்கப் படுத்தினார்:

நீர் இன்றித் தாங்க
இயலாத அளவுக்கு என்
வேதனை இப்பொழுது பெருகியுள்ளது.
நீர் இன்றி என்னால்
வெற்றி கொள்ள இயலாத
இளைப்பும் பயமும் அதிகரித்துள்ளது
எனது கண்பார்வையானது
விளக்கொன்றின் துடிப்புப் போன்றுள்ளது
நீரின்றி அதுவும் இருளானது.
நான் அறிக்கை செய்கிறேன்:
நீர் இன்றி மரணத்திற்கு
நான் அஞ்சுகின்றேன்
நீர் இன்றி என்னிடத்தில்
விசுவாசத்தின் நிறை ஆதாரமில்லை
எனவே எனக்கு உதவும், தேவனே,
உம்மோடு நான் ஒரு வேளையில்
ஒரு அடியெடுத்துவைக்க
நீர் ஒருவரே எனது நம்பிக்கை![2]

"உள்ளான மனிதன்" என்பதுதான் தேவனுடைய பலம் நமக்குத் தேவைப் படுகின்ற இடமாக உள்ளது.

பவுலின் ஜெபத்தில் உள்ள மற்ற சில விஷயங்களைக் கவனியுங்கள். தேவன் தம்முடைய பலத்தை நமக்குக் கொடுப்பதற்கான காரணம், வசனம் 17ல் காணப்படுகிறது: "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் ..." இரண்டு கிரேக்க வார்த்தைகள் "வாசமாயிருத்தல்"

என்ற வினைச் சொல்லாக மொழிபெயர்க்கப்பட முடியும். அவற்றில் ஒன்று, ஓரிடத்தில் தற்காலிக அடிப்படையில் தங்கியிருத்தல் என்று அர்த்தப் படுகிறது. இன்னொரு கிரேக்க வார்த்தையானது "(நிரந்தரமாய்) தங்குதல்" என்று அர்த்தப்படுகின்றது. இது ஒரு தங்கும் விடுதி அறைக்கும் வீட்டிற்கும் உள்ள வேறுபாடாக இருக்கிறது. நாம் ஓரிடத்தில் தற்காலிகமாகத் தங்கியிருக்கலாம்; ஆனால் நாம் உண்மையில் வாழும் இடம் வேறொன்றாக இருக்கும். இவ்வசனப் பகுதியில் பவுல் இரண்டாவது வார்த்தையையே (Gk.: *katoikeo*) பயன்படுத்தினார். நிரந்தரமாய்த் தங்குமிடம் என்பதையே அவர் சிந்தையில் கொண்டிருந்தார்.

நமது இதயங்களை இயேசு தமது இல்லமாக்குமளவுக்குத் தேவன் கர்த்தருடைய சபையின் உள்ளூர் சபைகளின் மீது தமது வல்லமையைப் பொழிய வேண்டும் என்று பவுல் ஜெபித்தார். இயேசு நமது இதயங்களில் ஒரு விருந்தினராக இருக்க விரும்புவதில்லை. அவர் நமது வாழ்வின் விருந்தினர் பதிவேடுகளில் அட்டவணைப்படுத்தப்பட்டிருப்பதை விரும்பு வதில்லை. அவர் நம்மில் நிலையாகத் தங்குமிடம் கொண்டிருப்பதையே தம் சிந்தையில் கொண்டுள்ளார்.

நம் வாழ்வில் இயேசு தங்கியுள்ளார் என்பதை நாம் எவ்வாறு அறிகின்றோம்? அவர் நமக்குள் வாசம் பண்ணி உள்ளூர் சபையில் குடியமர்ந்துள்ளதைச் சுட்டிக்காண்பிக்கின்ற சோதனை எது? உள்ளூர் சபை ஒன்றில் தேவனுடைய வல்லமை உண்மையில் பிரசன்னமாகியிருக்கின்ற பொழுது, அங்குள்ள கிறிஸ்தவர்களின் மத்தியில் ஆழமான அன்பு நிலவும் என்று பவுல் கூறினார். நாம் "அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்களாய்" இருப்போம். சபையில் அன்பு என்பது கர்த்தருடைய பிரசன்னத்தைச் சுட்டிக் காண்பிக்கின்றது. இந்த கொள்கை மீண்டும் எடுத்துரைக்கப்படத் தக்கதாக உள்ளது. சபையில் அன்பு என்பது கர்த்தருடைய பிரசன்னத்தைச் சுட்டிக் காண்பிக்கின்றது.

சகோதரர் வில்லார்டு டேட் அவர்கள் உள்ளூர் சபையில் அன்பின் முக்கியத்துவத்தைப் பின்வருமாறு வலியுறுத்தினார்:

> டல்லாஸிற்கு வடபகுதியில் உள்ள ஒரு சிறு நகருக்கு ஒரு கருத்தரங்கு நடத்தச் சென்ற வேளையை நான் நினைத்துப் பார்க்கின்றேன் ... அங்கு சபை எந்த இடத்தில் இருந்தது என்பதை நான் அறியவில்லை. எனவே நான் ஒரு 7-11 கடையில் நின்றேன், அது அக்கட்டிடத்திலிருந்து கல்லெறி தூரத்தினுள் இருந்தது. அங்கு வாகனத்திற்கு பெட்ரோல் நிரப்பிக் கொண்டிருந்த ஒரு இளைஞனிடம், சபைக் கட்டிடம் எங்குள்ளது என்று கேட்டேன்.
>
> "இல்லை, எனக்குத் தெரியாது" என்று அவர் பதில் அளித்தார்.
>
> பின்பு நான் கடையின் உட்புறம் சென்று கடையின் உரிமையாளரிடம் விசாரித்தேன். அவருக்கும் சபையைப் பற்றித் தெரியவில்லை. நாங்கள் தொலைபேசிப் புத்தகத்தில் அதைத் தேட வேண்டியதாயிற்று!
>
> இந்த நபர்கள் சபையினிடத்தில் வெறுப்புணர்வு எதுவும் கொண்டிருக்கவில்லை. அது (சபை) அங்கு இருந்தது என்பதை

அவர்கள் அறியவில்லை, அவ்வளவுதான்! ...

துரதிர்ஷ்டவசமாக, எனக்கு இம்மாதிரி அனுபவம் ஒன்றுக்கு மேல் ஏற்பட்டுள்ளது. ஆனால் நான் கேள்விப்பட்டிருக்க விரும்பிய விஷயம் என்னவென்று நீங்கள் அறிவீர்களா? என்னிடத்தில் அந்த நபர்கள் பின்வருமாறு கூறியிருக்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகின்றேன்: "அந்தக் குன்றின் மீது ஒரு குழுவினர் ஒன்றுகூடுகின்றனர். அவர்கள் யார் என்றோ அல்லது அவர்கள் தங்களை எப்படி அழைத்துக் கொள்கின்றனர் என்றோ எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் பார்த்திருக்கக் கூடியவர்களிலேயே அவர்கள் மிகுந்த அன்புள்ளம் கொண்டவர்களாய் உள்ளனர். அவர்கள் ஒருவர் பிறரின் மீது அக்கறை கொண்டுள்ளனர், பிறரின் தேவைகளைக் கூடக் கவனிக்க முன் வருகின்றனர். நீங்கள் அவர்களை ஆராய்ந்து, அவர்கள் யார் என்று காண வேண்டும்"[3]

சபையில் அன்பு என்பது கர்த்தருடைய பிரசன்னத்தைச் சுட்டிக் காண்பிக்கிறது. உள்ளூர் சபையில் கிறிஸ்தவர்கள் ஒருவர் பிறரின் மீது அன்பு கூருவதற்கான பலத்தைத் தேவன் அளிக்கின்றார்.

## இயேசுவின் அன்பைப் புரிந்துணர்ந்து கொள்ளத் தேவன் (நமக்கு) பலம் அளிக்கின்றார்

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவினுடைய அன்பின் மாபெரும் பரிமாணத்தை (அளவுகளை)ப் புரிந்துணர வேண்டும் என்று பவுல் விரும்பினார்:

> ... நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக் கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும் ... (3:17ஆ-19அ).

மாபெரும் கடலின் கரையோரத்தில் நீங்கள் எப்பொழுதாவது நின்றிருக்கின்றீர்களா? மலைக் கணவாய்களினூடே ஓடும் மாபெரும் ஆற்றின் அருகே நீங்கள் இருந்துள்ளீர்களா? பசிபிக் மகா சமுத்திரத்தின் அளவீடுகளைக் கணக்கிட ஒரு பிளாஸ்டிக் அளவுகோல் - பள்ளிப் பிள்ளைகள் பயன்படுத்துவது போன்றது - பயன்படுத்தப்பட்டால் அதைக் கணக்கிட எவ்வளவு நாட்கள் ஆகும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். கணவாய் ஆற்றின் ஒவ்வொரு அங்குலத்தையும் அதைக் கொண்டு அளக்க ஆகும் காலம் எவ்வளவாக இருக்கும்? அது எவ்வளவு காலத்தை எடுத்துக் கொள்ளுமோ, அந்த அளவானது, உங்கள்மீது இயேசு கொண்டுள்ள அன்பை அளப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம் மற்றும் முயற்சியின் நல்ல தொடக்கத்தை விவரிக்கக் கூடப் போதுமானதாக இருக்காது.

குழந்தைகளுக்கான பாடல் ஒன்று, ''இயேசு என்னை அன்பு

*செய்கின்றார்! இதனை நான் அறிந்திருக்கின்றேன்" என்று கூறுகின்றது. இயேசுவின் அன்பை நாம் பற்றிக் கொள்வதற்குத் தேவன் நமக்கு பலம் அளிக்காத வரையிலும இயேசு நம் மீது எவ்வளவு அதிகமாய் அன்பு கூருகின்றார் என்பதை உண்மையாக நாம் அறிய முடியாது.*

*கிறிஸ்துவினுடைய அன்பின் அகலத்தைப் புரிந்துணர்வதற்கு தேவனிடமிருந்து வருகின்ற பலம் அவசியமாய் உள்ளது. அவருடைய அன்பானது மனித இனம் முழுவதையும் - உலகில் உள்ள ஒவ்வொரு ஆணையும், பெண்ணையும், பையனையும், சிறுமியையும் மற்றும் அனைவரையும் - அரவணைக்கின்றது. உங்களையும் என்னையும் பெயரைக் கொண்டுகூட அவர் அறிகின்றார். அவர் எப்பொழுதும் இதைக் கொண்டுள்ளார். அவர் உங்கள் முகத்தை அறிகின்றார். உங்கள் சிரிப்பின் ஒலியை இயேசு புரிந்து கொள்ளுவார். உங்கள் குரலை உடனடியாக அவர் புரிந்து கொள்ளுவார். பிறரிடமிருந்து உங்களை மறைந்திருக்கும்படி செய்கின்ற அந்தப் புண் படுத்துதல்களை அவர் அறிகின்றார். அவரை வசீகரிக்க வேண்டுமே என்று நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. அவர் உங்களை விரும்புகிறாரா இல்லையா என்று கவலைப்பட்டு நீங்கள் கண்ணுறக்கம் இழக்கத் தேவையில்லை. இயேசு உங்கள் மீது அன்புகூருகின்றார்.*

*கிறிஸ்துவினுடைய அன்பின் நீளத்தைப் புரிந்துணர்வதற்கு தேவனிடமிருந்து வருகின்ற பலம் அவசியமாய் உள்ளது. அவருடைய அன்பு நித்தியத்திலிருந்து நித்தியம் வரையிலும் சென்று அடைகின்றது. நீங்கள் பிறக்கு முன்பாகவே அவர் உங்கள் மீது அன்புகூர்ந்தார். அவர் இப்பொழுது உங்கள் மீது வேறு எவரைக் காட்டிலும் அதிகம் அன்புகூருகின்றார், மற்றும் அவர் உங்களை என்றென்றைக்கும் அன்புகூர்ந்து கொண்டிருப்பார். அவர் மீது உங்களுக்கு அன்பில்லை என்பது போல் செயல்படுவதை நீங்கள் தேர்ந்து கொள்ளும் பொழுதும்கூட அப்பொழுதும் அவர் உங்கள்மீது அன்புகூருகின்றார். இயேசு உங்கள் மீது அன்புகூருவதை ஏதொன்றினாலும் நிறுத்த முடியாது.*

*ஒருநாளும் முற்றுப் பெறாத, உங்களிடமிருந்து பதிலுக்கு ஏதோன்றையும் எதிர்பார்க்காத அன்பைப் புரிந்து கொள்ளுதல் என்பது நம் உலகத்திற்குக் கடினமானதாக உள்ளது. நாம் நிபந்தனைக்குட்பட்ட அன்பு என்பதை மட்டுமே அறிந்தவர்களாய் இருக்கின்றோம். நாம் "இதுவரை" அன்பு என்பது பற்றி எல்லாவற்றையும் அறிந்துள்ளோம்: நாம் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வரை மட்டுமே அவர்கள் பொதுவாக நம்மீது அன்பு காட்டுவார்கள். இருப்பினும் இயேசு, நம்மீது நிபந்தனையற்ற வகையில் "ஒரு நாளும் நின்று போகாத வகையில்" அன்புகூருகின்றார்.*

*கிறிஸ்துவினுடைய அன்பின் உயரத்தைப் புரிந்துணர்வதற்கு தேவனிடமிருந்து வருகின்ற பலம் அவசியமாய் உள்ளது. அவர் விண்ணகத்தில் தேவனுடன் இருக்கிறார், நாமும் அங்கிருக்க வேண்டும் என்றுதான் அவர் விரும்புகின்றார். நாம் குறைவானவற்றில் குடி அமர்ந்து விடுவதை அவர் விரும்பிவிடாத அளவுக்கு அவரது அன்பு அவ்வளவு உயரத்தை எட்டுகின்றது. சாத்தானோ இதை (குறைவானவைகளை மட்டுமே நாம் கொண்டிருக்க வேண்டும் என்பதை) விரும்புகின்றான். நாம் உடைகள்,*

வாகனங்கள், வேலைகள், விளையாட்டுகள், சுயம் ஆகியவற்றில் அதிகம் ஈடுபாடு கொண்டு, இயேசு நமக்குத் தருவதைத் தவற விட வேண்டும் என்றே அவன் நாடுகின்றான். இயேசுவோ நமக்கு பரலோகம், நித்திய ஜீவன், முழுமையான சந்தோஷம், சமாதானம், மற்றும் நமக்காகவே ஏற்படுத்தப்பட்ட இல்லம் ஆகியவற்றையும், நமது பரலோக பிதாவுடன் என்றைன்றும் இருக்கும் சிலாக்கியத்தையும் நமக்குத் தர விரும்புகின்றார்.

கிறிஸ்துவினுடைய அன்பின் ஆழத்தைப் புரிந்துணர்வதற்கு தேவனிடமிருந்து வருகின்ற பலம் அவசியமாய் உள்ளது. அது (அந்த அன்பு), இயேசு இப்பூமிக்கு வந்து முன்னணை ஒன்றில் பிறப்பதற்காகப் பரலோகத்திற்கு பிரியாவிடை கூறிய அளவுக்கு அவ்வளவு ஆழமானதாக உள்ளது, இயேசு மனம் விரும்பி சிலுவையில் மரிக்குமளவுக்கு அவ்வளவு ஆழமானது, அந்தச் சிலுவையில் இயேசு நம் அனைவரின் பாவங்களையும் சுமக்குமளவுக்கு அவ்வளவு ஆழமானது, இயேசு உங்கள் இரட்சகராக, கர்த்தராக மற்றும் நண்பராக இருப்பதற்காகக் கல்லறையை விட்டு - உயிருள்ளவராக - வந்த அளவுக்கு அவ்வளவு ஆழமானது.

இதோ இங்கு எனது கோட்பாடு உள்ளது: கிறிஸ்து நம்மீது கொண்ட அன்பின் உண்மைத்தன்மை குறித்து கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் எண்ணத்தில் மூழ்கி, பெரு வியப்படைகின்ற பொழுது, நம் வாழ்வு மாற்றம் அடையும். நாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து கொண்ட பிறகும் மக்களைத் தொடர்ந்து தவறாக நடத்திக் கொண்டிருக்க முடியாது. நாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து கொண்ட பிறகும் அதைப் புட்டிக்குள் அடைத்து வைத்துக் கொண்டிருக்க முடியாது. அது மற்றவர்களுக்குப் பெருக்கெடுத்து ஓட வேண்டியதாக உள்ளது. நாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து கொண்ட பிறகும், யாரேனும் ஒருவரிடத்தில் இரக்கமற்றோ அல்லது யாரேனும் ஒருவரைக் கிழித்துப் போடுபவர்களாகவோ இருக்க முடியாது, ஏனென்றால், அந்த நபரை இயேசு எவ்வளவாக அன்புகூருகின்றார் என்பதை நாம் அறிகின்றோம்.

தேவனை ஆராதிக்கவும் அவரைத் துதிக்கவும் விரும்பாமல் நாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து உணர முடியாது. நம்மால் இயன்ற ஒவ்வொரு வழிமுறையிலும் நாம் தேவனுக்கு ஊழியம் செய்யவும் அவரைக் கனப்படுத்தவும் விரும்பாமல் நாம் கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து உணர முடியாது.

கிறிஸ்துவின் அன்பைப் புரிந்து உணர்ந்து கொள்வதற்கான பலம் நமக்குள்ளாகவே இருந்து நமக்கு வருவதில்லை என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். அதைப் பெறுவதற்கு நாம் முழங்கால் படியிட்டு ஜெபிக்க வேண்டும். அதைப் புரிந்து கொள்வதற்கான பலத்தைத் தேவன் மட்டுமே நமக்கு அளிக்கின்றார். உங்கள் உள்ளூர் சபையில் தேவனுடைய வல்லமை பெருக்கெடுத்து ஓட வேண்டும் என்று ஜெபியுங்கள். கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் சகோதரர்களும் சகோதரிகளும் தேவன் விரும்புகின்ற வகையில் ஒருவர் மற்றவர் மீது அன்பு கூரவேண்டும் என்று ஜெபியுங்கள். இயேசுவின் ஆச்சரியம் நிறைந்த அன்பை நீங்கள் முன் எப்போதும் புரிந்திராதபடி புரிந்து கொள்ள வல்லமை கொண்டிருக்க வேண்டும் என்று

*உங்களுக்காகவும் உங்கள் சபைக்காகவும் ஜெபியுங்கள். சபையில் உள்ள ஒரு நபருக்காக ஜெபிப்பதற்குக் குறிப்பாக ஒரு கணம் எடுத்துக் கொள்ளுங்கள். அவருடைய அல்லது அவளுடைய வாழ்வில் தேவனுடைய வல்லமைக்காக ஜெபியுங்கள். பிற்பாடு அதைப் பற்றி அந்த நபர் அறியச் செய்யுங்கள். அவரிடம் அல்லது அவளிடம் உங்கள் ஜெபத்தைப் பற்றிக் கூறுங்கள்.*

## தேவனுடைய பரிபூரணத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் இருப்பதற்கு தேவன் நமக்கு பலம் அளிக்கின்றார்

ஒரு உள்ளூர் சபையானது "அறிவுக்கெட்டாத கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள" வேண்டும் என்று பவுல் ஜெபித்தார். ஏன்? இதற்கான காரணத்தை வசனம் 19 தருகின்றது: அது (சபை) "தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட வேண்டும்."

தனது குடும்பத்திலிருந்து தானாகவே பிரிந்து போயிருத்தலைத் தனக்கு விதித்துக் கொண்ட ஒரு மனிதன் பற்றிய கதையொன்றை J. வில்பர் சேப்மன் அவர்கள் கூறுவதுண்டு. அந்த மனிதன் தேர்ந்து கொண்ட வாழ்வு அவனைச் சிதைத்தது. அவன் கிழிந்து போன உடைகளுடன் எங்கும் சுற்றித் திரிந்து, உயிர் வாழ்வதற்காகப் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் இம்மனிதன் ஒரு புகைவண்டி நிலையத்தின் அருகில் பிச்சை கேட்டுக் கை நீட்டிக் கொண்டிருந்தான். பயணி ஒருவர் புகை வண்டியை விட்டு இறங்கி வந்த பொழுது அவரின் பின்புறமாய் சென்ற இம்மனிதன் அவரது தோளில் தட்டினான்.

"ஐயா, எனக்கு நீங்கள் பத்து பைசா கொடுக்க முடியுமா? பத்து பைசா மட்டும்."

பயணி திரும்பிப் பார்த்தார், அந்தப் பிச்சைக்காரன் தனது கையை நீட்டிக் கொண்டிருந்தான். அந்தப் பிச்சைக்காரன் அப்பயணியின் முகத்தை உற்றுப் பார்த்தான் ... அதை அவன் கண்ட பொழுது, அவனது முகம் அதிர்ச்சியால் வெளிறிப் போயிற்று. அந்தப் பயணி அவனது தந்தையாக இருந்தார். அவன் அவரை ஆண்டுகள் பலவாகப் பார்த்திருந்ததில்லை.

"அப்பா, என்னை யாரென்று தெரிகின்றதா?" அவன் கேட்டான்.

தந்தை தனது மகனைத் தன் கரங்களினால் கட்டிப் பிடித்துக் கொண்டார். அவரது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடிற்று. "மகனே, கடைசியில் உன்னைக் கண்டு பிடித்து விட்டேன். இவ்வளவு ஆண்டு களுக்குப் பிறகு உன்னைக் கண்டு பிடித்து விட்டேன். உனக்குப் பத்து பைசாவா வேண்டும்? என்னுடையது எல்லாம் உன்னுடையதல்லவா?"[4]

நம்மில் எத்தனை பேர் இந்தப் பிச்சைக்காரனைப் போல் இருக்கின் றோம்? நமது பரலோக பிதா விண்ணக ஐசுவரியங்களை நம்மீது பொழிய விருப்பம் கொண்டுள்ள பொழுது பத்து பைசாக்களுக்காகப் பிச்சை யெடுத்துக் கொண்டிருக்கிறோம். வெள்ளிக் கிழமை இரவில் ஒரு திரைப்படத்திற்குச் செல்லும் பொழுது, கடையொன்றிற்குச் செல்லும்

பொழுது, பள்ளிக்குப் புது உடைகள் வாங்கும் பொழுது, அல்லது வேலையில் கடைசியாக நமக்குப் பதவி உயர்வு கிட்டும் பொழுது, நாம் வாழ்வைக் கண்டு விட்டதாக நினைக்கின்றோம். ஒரு உணவுச் சாலையில் அல்லது ஒரு விருந்தில் நண்பர்களுடன் ஓரிரவை நாம் செலவிட்டு விட்டால், அதை வாழ்வின் நற்பேறாகக் கருதுகின்றோம். ஒரு சில ஆண்டுகளுக்கு மாத்திரம் நாம் விரும்புவதைச் செய்வதற்காக ஓய்வு பெறக்கூடும்படி நாம் நாற்பது ஆண்டுகள் பணி செய்கின்றோம். நமது பிதாவானவர், "தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நம்மை நிரப்ப" விரும்புகின்ற பொழுது, நாம், பத்து பைசாக்களுடன் திருப்திப்பட்டுக் கொள்ளுகின்றோம்.

"தேவனுடைய சகல பரிபூரணத்தினாலும் நிரப்பப்படுதல்" என்பதன் அர்த்தம் என்ன? இது இயேசுவைப் போல் இருத்தல் - அவரது சிந்தையைக் கொண்டிருத்தல், அவரது சிந்தனைகளைக் கொண்டிருத்தல்; அவர் செயல்படுவது போன்று செயல்படுதல்; அவரது இரக்கத்தைக் கொண்டிருத் தல், அவரது அன்பை, தேவ சித்தத்திற்கு அவரது ஒப்புக் கொடுத்தலைக் கொண்டிருத்தல் - என்று அர்த்தப்படுகின்றது. இது, பிதாவின் மீது அவரது நம்பிக்கை போன்ற நம்பிக்கை கொண்டிருத்தல், ஜீவனுக்கான அவரது பேரார்வம், அவரது மகிழ்ச்சி மற்றும் அவரது நற்பண்பு ஆகியவற்றைக் கொண்டிருத்தல் என்று அர்த்தப்படுகின்றது. இது பிதாவைத் துதிக்கவும் கனப்படுத்தவும் இயேசுவின் சொந்தத் திறனைக் கொண்டிருத்தல் என்று அர்த்தப்படுகின்றது, அதுவே வாழ்வாக உள்ளது!

## முடிவுரை

ஒவ்வொரு உள்ளூர் சபையும் தேவனுடைய வல்லமையை அனு பவிப்பதைக் காண வேண்டும் என்று தேவன் பலத்த விருப்பம் கொண்டுள்ளார். கிறிஸ்தவர்கள் ஒருவர் மற்றவரை அன்புகூருவதற்குப் பலப்படுத்தவும் இயேசு நமக்காகக் கொண்டுள்ள அன்பைப் புரிந்துணர் வதற்கும் இயேசுவைப் போன்று வல்லமை கொண்டிருப்பதற்கும் அவர்களை பலப்படுத்த உள்ளூர் சபைகள் வல்லமை கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்.

மக்களுடன் அன்புகூர நீங்கள் போராடிக் கொண்டிருந்தால், அல்லது இயேசு உங்கள்மீது எவ்வளவு அன்புகூருகின்றார் என்பதைப் புரிந்து கொள்ள நீங்கள் சிரமப்பட்டால், ஜெபம்தான் நீங்கள் தொடங்கும் இடமாக உள்ளது. இயேசுவைப் போலாவதற்கு நீங்கள் முயற்சி செய்கையில் நீங்கள் இடறி விழுபவர்களாக உங்களையே கண்டால், இது ஜெபிப்பதற்கான வேளையாக உள்ளது.

அவ்வகையான ஜெபத்திற்குத் தேவன் தம் பதிலினால் உங்களைப் பெரும் வியப்பில் ஆழ்த்துவார்.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும்
அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே,

*நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங் களிலும் மகிமை உண்டாவதாக! ஆமென் (3:20, 21).*

---

குறிப்புகள்

[1]E.M. Bounds, quoted in Jack Taylor, *Prayer: Life's Limitless Reach* (Nashville, Tenn.: Broadman Press, 1977), 15. [2]Randy Becton, *Coming to Grips With God* (Abilene, Tex.: Randy Becton, 1977), 111. [3]Willard Tate, *Learning to Love* (Nashville, Tenn.: Gospel Advocate Co., 1988), 77. [4]Adapted from Max Anders, *The Good Life: Living With Meaning in a "Never-Enough" World* (Dallas: Word Publishing, 1993), 78-79.